[2022] 18 S.C.R. 133

அசோக் ஜி. ரஜனி

//எதிர்//

பீகான் டிரஸ்டிஷிப் லிட். & இதர நபர்கள்

(உரிமையியல் மேல்முறையீடு எண். 4911/2021)

செப்டம்பர் 22, 2022

[மாண்புமிகு நீதியரசர் திருமதி. இந்திரா பாணர்ஜீ

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு.ஜே.கே. மகேஸ்வரி]

நொடிப்பு நிலை மற்றும் வணிக நொடிப்பு நிலைச் சட்டம் , 2016 – கூட்டு நிறுவன கடனாளிக்கும், 1 முதல் 3 வரையிலான எதிமனுதாரருக்கு இடையே இசைவுத் தீர்வு நடவடிக்கை நிலுவையில் உள்ளது – 1 முதல் 3 வரையிலான எதிர்மானுதாரர்கள் NCLT (தேசீய நிறுவனச்சட்ட ஆணையம்) முன்பு IBC பிரிவு 7 இன் படி மனுத் தாக்கல் செய்திருக்கிறார்கள் – பெருநிறுவன நிறுவனக் கடனாளியை தொகை செலுத்தும்படி இசைவுத் தீர்பாளர் உத்தரவிட்டார் – தரப்பினர்கள் தீர்வை எட்டினர் – NCLT (தேசீய நிறுவனச்சட்ட ஆணையம்) தீர்வை பரிசீலித்து, நொடிப்பு நிலை மற்றும் வணிக நொடிப்பு நிலைச் சட்டத்தின் கீழ் அறிவிப்பு வெளியிடுவதற்கு இடைக்காலத் தடை விதித்தது – தரப்பினர்கள் , IRP (நொடிப்பு நிலை தீர்வு நடவடிக்கை) இன் ஒப்புதலோடு நொடிப்பு நிலை மற்றும் வணிக நொடிப்பு நிலைச் சட்டப் பிரிவு 12 A இன் கீழ், NCLT (தேசீய நிறுவனச் சட்ட ஆணையத்திடம்) தாக்கல் செய்த மனு நிலுவையில் உள்ளது – இருப்பினும், தரப்பினர்களுக்கிடையே பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுவிட்டபோதிலும், NCLAT (தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயம்) ஆனது, கடன் அளித்தோர் குழு (CoC) உருவாக்குவதற்கு தடை விதித்து, அறிவிப்பு வெளியிடவும், அனைத்து சொத்துக்களையும் ஒப்படைக்கவும் மற்றும் CIRP (பெருநிறுவன நொடிப்பு

நிலை தீர்வு நடவடிக்கையை) தொடரவும், IRP க்கு (இடைநிலை தீர்வு வல்லுநர்) அனுமதி அளித்தது – மேல்முறையீட்டின் போது, முடிவு : மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட IBC (நொடிப்புநிலை மற்றும் வணிக நொடிப்பு நிலைச் சட்டம்) பிரிவு 7 இன் கீழான ஒரு மனுவை திருப்பப்பெறுவதற்கு IBC (நொடிப்புநிலை மற்றும் வணிக நொடிப்பு நிலைச் சட்டம்) சட்டப்பிரிவு 12 A தெளிவாக அனுமதிக்கிறது– கடன் அளித்தோர் குழு உருவாக்கப்படுவதற்கு முன்பாக, IBC (நொடிப்புநிலை மற்றும் வணிக நொடிப்பு நிலைச் சட்டம்) பிரிவு 7 இன் கீழ் அனுமதிக்கப்பட்ட மனுவை மனுதாரர் திரும்பப்பெறுவதற்கு எந்த ஒரு தடையுமில்லை – பெருநிறுவன கடன்தாரருக்கு எதிராக மூன்றாம் தரப்பினர் உரிமை கோரிக்கைகளை எழுப்பக்கூடும் என்ற யூகத்தின் அடிப்படையில் , கடன் அளித்தோர் குழு (CoC) உருவாக்க்கப்படுவதற்கு முன்பாக தீர்வுகளை முடக்க முடியாது – பிரச்சினைக்கான தீர்வு காணப்பட்ட நிலையில் , CIRP கான மனுதாரர் தனது மனுவை திரும்பப்பெற்றுக்கொள்வதை ஏன் அனுமதிக்கக் கூடாது என்பதற்கான எந்த ஒரு காரணமுமில்லை – தீர்வுக்கான மனுவை பரிசீலிக்க NCLT தேசீய நிறுவனச்சட்ட ஆணையம்) க்கு அறிவுறுத்தப்பட்டது .

மேல்முறையீட்டை தள்ளுபடி செய்த நீதிமன்றம் பின்வருமாறு உத்திரவிடப்படுகிறது :

1. மனுதாரரால் தாக்கல் செய்த மனுவை ஏற்று, IBC சட்டப்பிரிவு 7 இன் கீழான ஒரு மனுவை திருப்பப்பெறுவதை IBC சட்டப்பிரிவு 12 A தெளிவாக அனுமதிக்கிறது. கமிட்டி ஆஃப் கிரடிட்டார் அமைப்புக்கு (பெருநிறுவன நிதி வழங்குனர் குழு) தேவையான சதவிகித்தில் வாக்குகள் அளிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்படுவது குறித்த கேள்வி அம்மாதிரியான கமிட்டி ஆஃப் கிரடிட்டார் அமைப்பு (பெருநிறுவன நிதி வழங்குனர் குழு) ஒன்று உருவாக்கப்பட்ட பிறகே எழும். கமிட்டி ஆஃப் கிரடிட்டார் அமைப்பை (பெருநிறுவன நிதி வழங்குனர் குழு)

உருவாக்குவதற்கு முன்பு, IBC சட்டப்பிரிவு 7 இன் கீழ் அனுமதிக்கப்பட்ட மனுவை மனுதாரர் திரும்பப்பெறுவதில் எந்த தடையுமில்லை என்பதே எங்களது கருத்தாகும். [பத்தி 24] [139-D-E]

2. அதன் அறிக்கையில் நோக்கங்கள் மற்றும் காரணங்கள் குறித்து குறிப்பிடுகையில், கார்போரேட் நபர்கள், கூட்டு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் ஆகியோரின் மறுசீரமைப்பு, நொடிப்பு நிலை தீர்வுகள் தொடர்பாக , அந்நபர்களின் சொத்து மதிப்பை அதிகரிப்பதற்காகவும், தொழில் முனைவோரை ஊக்குவிக்கவும், அரசுக்கு செலுத்தவேண்டிய நிலுவைத்தொகைகளின் முன்னுரிமை வரிசையில் மாற்றங்களை மேற்கொள்வது உட்பட, வரவு வட்டி இருப்பு அனைத்து பங்குதாரர்களுக்கும் கிடைப்பதை உறுதி செய்யவும் , மற்றும் அதில் அது சம்பந்தமான விஷயங்களுக்கு நொடிப்புநிலை மற்றும் வணிக நொடிப்பு நிலை [இன்சால்வன்சி அண்ட் பேங்க்ரப்ட்ஸி] வாரியத்தை நிறுவவும், ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் சட்டங்களை தொகுத்தமைத்து அவற்றில் திருத்தங்களை மேற்கொள்வதுதான் IBC இன் குறிக்கோளாக இருக்கிறது. நொடிப்பு மற்றும் பொருளறு நிலை [இன்சால்வன்சி அண்ட் பேங்க்ரப்ட்ஸி] க்கு விரைவாக தீர்வுகாண பயன்தரத்தக்க ஒரு சட்டபூர்வமான கட்டமைப்பு இருப்பது தொழில்முனைவோரை ஊக்குவித்து , தொழிலை மேம்படச்செய்யும், மேலும் அதிகளவில் முதலீடுகளை ஈர்க்க வழிவகை செய்து அதிகளவில் பொருளாதார வளர்ச்சியையும் மற்றும் மேம்பாட்டையும் உறுதி செய்யும் என்று இந்த அறிக்கை தெரிவிக்கிறது. . [பத்தி 26&27] [139 H; 140-A-C].

3. CLT விதிகளின் கீழான சட்டமுறை விதி 11 இன் படியான குறிக்கோள்கள் மற்றும் காரணங்கள் குறித்த அறிக்கையை வாசித்தில், அது CIRP-இன் மனுதாரருக்கு மனுவைத் திருப்பப் பெற்றுக்கொள்ள

அனுமதி அளிப்பது உட்பட நீதியை நிலைநாட்டும்படியான உத்தரவை பிறப்பிக்க NCLT க்கு உதவுகிறது மற்றும் ஒரு பெருநிறுவன அமைப்புக்கு எந்த தடையுமின்றி தொழிலை எளிதாக நடத்தவும், உதவுகிறது. பெருநிறுவன கடன்தாரரின் முதலீடுகள் தங்களின் வாழ்வியல் மற்றும் வாழ்வாதாரத்திற்காக பெருநிறுவன கடன்தாரர் மீது சார்ந்திருக்கும் மக்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கையில், CIRP மனுதாரரின் பிரச்சினையை தீர்வு காணப்பட்டபிறகு அந்த மனுவைத் திருப்பப் பெற்றுக் கொள்ளும்படியான அனுமதியை மறுப்பதற்கான காரணம் எதுவுமில்லை [பத்தி 28 & 29][140-C-E]

4. பெருநிறுவன கடன்தாரருக்கு எதிராக மூன்றாம் தரப்பினர் உரிமை கோரிக்கைகளை எழுப்பக்கூடும் என்ற யூகத்தின் அடிப்படையில் , (CoC) பெருநிறுவன நிதி வழங்குனர் குழுவை உருவாக்கும் முன்பாக தீர்வுகளை முடக்க முடியாது. CIRP க்கான மனுவை மனுதாரர் திருப்பப் பெற்றுக்கொள்வது என்பது IBC இன் கீழ் வழக்கு நடவடிக்கையை மீண்டும் தொடர எந்த ஒரு நிதி வழங்குனரையும் தடை செய்யாது. தீர்வு காண் நடைமுறைகளை நிறைவேற்றுவதற்கான கால வரையறைகளுக்கு இணங்க நடப்பது என்பது தீர்வுகளை முடக்குவதற்கான காரணமல்ல. [பத்தி 30][140-E-F]

5. IBC பிரிவு 12 A இன் கீழ் தீர்வுக்கான தாக்கல் செய்யப்பட்ட மனுஇ தீர்ப்புப் பகரும் அதிகார அமைப்பு (NCLT) முன்பு நிலுவையில் உள்ளது. நிதி வழங்குனர்களின் குழுவை நிறுவுவதற்கு, NCLAT தடைவிதித்துள்ளது. எதிர்ப்புக்குள்ளான உத்தரவு ஒரு இடைக்கால உத்தரவு என்பதால், அதில் தலையீடு கோரமுடியாது. IBC சட்டப்பிரிவு 62 இன் கீழான மேல்முறையீட்டில், இந்த நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படவேண்டிய எந்த ஒரு சட்டப் பிரச்சினையும் இல்லை. அதன் படி இந்த

மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது. மேற்குறிப்பிட்ட கருத்துரைகளின் அடிப்படையில், தீர்வுக்கான மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அதை தீர்மானிக்கும்படி NCLT க்கு உத்தரவிடப்படுகிறது. **[பத்தி 32][142-B-C]**

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார எல்லை :

உரிமையியல்மேல்முறையீட்டு வழக்கு எண். . 4911/2021.

நிறுவன மேல்முறையீட்டு மனு (AT) (Ins) எண் 598/2021 இல் , புது டெல்லி தேசீய நிறுவனச்சட்ட மேல்முறையீட்டு ஆணையத்தின் முதன்மை அமர்வு வழங்கிய 18.08.2021 தேதியிட்ட தீர்ப்பாணை மற்றும் உத்திரவிலிருந்து எழுகிறது.

ஆஜர் தரப்பினர் சார்பாக , மூத்த வழக்குரைஞர்கள்: முகுல் ரோஹ்தகி, ஹுசெபா அஹ்மதி; வழக்குரைஞர்கள் அபிஜீத் சின்ஹா, புனித் ஜெயின், ஹர்ஷ் ஜெயின், ஹர்ஷித் கந்துஜா, செல்வி யாஷிகா ஷர்மா, செல்வி கிறிஸ்டிஜெயின், ரவி ரகுநாத், செல்வி. ரத்தினா மாரவர்மன், செல்வி . ஆகாஷி லோதா,சன்யாத் லோதா, மகேஷ் அகர்வால், ஹிமான்ஷு சதிஜா, திவ்யாங் சந்திரமணி,செல்வி . கோமல் குஷாலானி, ஷதாப் எஸ். ஜான், செல்வி. பிரேரனா வாக், யாஷ் டெம்பே, E. C. அகர்வாலா ஆகியோர் ஆஜரானார்கள் .

நீதி மன்றத்தின் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் இந்திரா பானர்ஜி அவர்களால வழங்கப்பட்டது

நொடிப்புநிலை மற்றும் வணிக நொடிப்பு நிலைச் சட்டம், 2016 [இன்சால்வன்சி அண்ட் பேங்க்ரப்ட்ஸி கோட் 2016] சட்டப்பிரிவு 62 கீழான இந்த மேல்முறையீட்டு மனுவானது, இதன் மேல்முறையீட்டாளரால், புது

டில்லி, தேசீய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் (NCLAT) முதன்மை அமர்வில், நிறுவன மேல்முறையீட்டு மனு (AT) (நொடிப்பு நிலை) எண். 598/2021 மீது வழங்கிய ஆகஸ்ட் 18 2021 தேதியிட்ட இடைநிலை உத்திரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டது, அதன்படி, NCLAT மேல்முறையீடு குறித்த அறிவிப்பை வழங்கியது, ஆனால், தி/ள் செயா இண்டஸ்ட்ரீஸ் லிமிட்டட் இன் (இதன் பிறகு "பெருநிறுவன கடன்தாரர்" என்று குறிப்பிடப்படும்) இடைக்கால தீர்வு தொழில்முறைநிபுணர்கள் (IRP) அதன் பெருநிறுவன இன்ஸால்வன்சி ரெசெல்யூஷன் நடைமுறைகளை (CIRP) தொடர்வதற்கு கட்டுப்பாடு விதிக்கவில்லை. இருப்பினும் அடுத்த விசாரணை நாள்வரை ஒரு கடன் அளித்தோர் குழு (CoC) உருவாக்குவதிலிருந்து தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீடு (NCLAT) தீர்ப்பாயம் இடைநிலைத் தீர்வு வல்லுநர் ((IRP) கட்டுப்பாட்டை விதித்தது. இதற்கிடையில், IBC சட்டப்பிரிவு 12 A உடன் இணைந்த தேசீய நிறுவனச்சட்ட தீர்ப்பாய விதிகள் 2016 (NCLT விதிகள்) இன் விதி 11 இல் வரையறைகளின்படி தீர்ப்பாயத்தின் முன் தேசிய நிறுவனச் சட்ட தீர்ப்பாயத்தின் (NCLT) வழக்குகளுக்கு தீர்வு காண்பதற்கான ஒரு வாய்ப்பு இதன் மேல்முறையீட்டாளர் மற்றும் இதன் எதிர்மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டது. விசாரணைக்காக அந்த மேல்முறையீடு செப்டம்பர் 13 2021 ஆம் தேதிக்கு பட்டியலிடும்படி உத்தரவிடப்பட்டது.

2. இதன் மேல்முறையீட்டாளர் 4, ஆவது எதிர்மனுதாரரின் இயக்குனர் ஆவார் அதாவது பெருநிறுவன கடன்தாரர். இந்த பெருநிறுவன கடன்தாரர் , நிறுவனச்சட்டம் 1956 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனம் ஆகும். அது 1990 ஆம் ஆண்டிலிருந்து மற்றவற்றுக்கிடையில் பென்ஸீன் அடிப்படையிலான சிறப்பு ரசாயனப் பொருட்களை தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுவருகிறது . பெருநிறுவன கடன்தாரர் தற்போது நடைபெற்றுவருகிற உற்பத்தி வசதிகளுக்காக ரூ. 400 கோடி வரை முதலீடு செய்திருப்பதாகவும் மற்றும் சிறப்பு ரசாயனப் பொருட்களுக்கான ஒன்றிணைக்கப்பட்ட க்ரீன்

ஃஃபீல்ட் மெகா ப்ராஜெக்ட் இல் மேற்கொண்டு கூடுதலாக ரூ. 900 கோடி முதலீட்டை செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது .

3. மேல்முறையீட்டாளரின் கூற்றுப்படி, இந்த பெருநிறுவன கடன்தாரர் தனது சம்பளப் பதிவேட்டில் சுமார் 150 தொழிலாளர்கள், 40 பயிற்சியற்ற தொழிலாளர்கள் மற்றும் 75 பணியாளர்களுடனும் மற்றும் 200 க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் / விற்பனையாளர்களை ஈடுபடுத்தி அவர்களின் வாழ்வாதாரத்துக்கு ஒரு மூலாதாரமாகவும் விளங்கி வருவதாக தெரிவிக்கிறார். இந்த பெருநிறுவனக் கடன்தாரர் தன்னகத்தே ரூ. 972 கோடி நிகர மதிப்புள்ள சொத்துக்களையும் ரூ. 1500 கோடிக்கும் மேற்பட்ட அசையா சொத்துக்களையும் கொண்டிருப்பதாக கூறப்படுகிறது.

4. பால்கார் (மகாராஷ்ட்ரா) தாராபூரிலுள்ள அதன் ரசாயனத் தொழிர்ச்சாலையை விரிவு படுத்தும் பொருட்டு, இந்த பெருநிறுவன கடன்தாரர் மூலதனத்தை அதிகரித்தார் என்றும், இதன் 1 ஆவது எதிர் மனுதாரரான தி/ள் பீக்கான் டிரஸ்டீஸ் ஷிப் லிமிட்டட் (இதன் பிறகு " பீக்கான் டிரஸ்டீஸ் ஷிப்"என்று குறிப்பிடப்படும்) அந்த குறிப்பிட்ட ஒன்றிணைக்கப்பட்ட க்ரீன் ஃஃபீல்ட் மெகா ப்ராஜெக்ட் இல் ரூ. 100 கோடிகளை அதில் ரூ. 20 கோடி நிறுவனப் பங்குகளாக மாற்றிக்கொள்ளத் தக்க வகையிலான பங்குகளாகவும் (CCPS– கம்பல்சரிலி கன்வார்டிபிள்ஷேர்ஸ்) மற்றும் ரூ. 80 கோடி மாற்ற இயலாத கடனீட்டு ஆவணங்களாகவும் (NCD's நான் கன்வார்டிபிள் டிபஞ்ச்சர்ஸ்) முதலீடு செய்ய உறுதியளித்திருக்கிறார். அதன் பிறகு இதன் மேல்முறையீட்டாளர் பெருநிறுவன கடன்தாரர் மற்றும் இதன் எதிர்மானுதாரர் பீக்கான் டிரஸ்டீஸ் ஷிப் இருவரும் மற்றவற்றுக்கிடையில் அந்த குறிப்பிட்ட NCD க்களை வழங்குவதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பதிவு செய்து ஒரு டிபஞ்சர் டிரஸ்ட் டீட் (DTD) ஐ (கடனீட்டு அறக்கட்டளை ஆவணம்)

நிறைவேற்றியிருக்கிறார்கள் . NCD க்கள் தொடர்பாக இதன் பெருநிறுவன கடன்தாரருக்குள்ள கடப்பாடுகளை அந்த DTD வகுத்துரைத்தது.

5. 2019 ஆம் ஆண்டு மார்ச் 11 அன்றோ அல்லது அதை ஒட்டியோ, 360 சீரீஸ் A டிபஞ்சர்ஸ் மற்றும் 360 சீரீஸ் B டிபஞ்சர்ஸ்க்கான (ஃபர்ஸ்ட் டிராஞ்சி டிபஞ்ச்சர்ஸ்) பங்களிப்பாக ரூ. 72,00,00,000 (இந்திய ரூபாய் எழுபத்தியிரண்டு கோடிகள்) தொகையை பீக்கான் டிரஸ்டீஸ் ஷிப் விடுவித்தது. அந்த மேலே குறிப்பிட்ட தொகை நிறுவனத்தின் இயக்கத் திறன் விரிவாகத்துக்கு முதலீடு செய்யபப்டவேண்டியது ஆகவே அது ரொக்கப் பணச்செலவுகளுக்காக பயன்படுத்த முடியாதது. முதலாவது கடனீட்டுப் பத்திரத்திற்கான (ஃபர்ஸ்ட் டிராஞ்சி) வட்டி பீக்கான் டிரஸ்டீஸ் ஷிப் இரண்டாவது கடனீட்டுப் பத்திரங்களில் (செகண்ட் டிராஞ்சி) முதலீடு செய்யப்படவிருக்கும் ரூ. 8 கோடி தொகையிலிருந்து சரி செய்து கொள்ளப்படவேண்டும். அதற்கான பண செலவு பரிமாற்றங்களுக்கு வழிவகைகளை அது செய்திருக்கும். மற்றும் அதன் மீதத் தொகை நிலைச் செலவீனங்களுக்கு (கேபெக்ஸ்) முதலீடு செய்யப்படவேண்டும். இந்த நிலையில் பீக்கான் டிரஸ்டீஸ் ஷிப் இரண்டாவது கடனீட்டுப் பத்திர முதலீடு ரூ. 8 கோடி தொகையை செலுத்தத் தவறியிருக்கிறது.

6. 2019 மார்ச் 8 தேதியிட்ட DTD க்கும் கூடுதலாக, இதன் தரப்பினர்கள் அந்த DTD இல் வகுத்துரைக்கப்பட்ட காலவரையறை , மற்றும் வட்டி செலுத்துவதற்கான தேதிகளின் அட்டவணை ஆகியவை உட்பட குறிப்பிட்ட விதிமுறைகளை திருத்தியமைத்து 2019 மார்ச் 14 ஆம் தேதியிட்ட ஒரு துணை ஆவணத்தை நிறைவேற்றினர்

7. 2019 மே 31 ஆம் தேதி, பெருநிறுவன கடன்தாரர் இதன் 1 லிருந்து 3 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு ஒரு மின்னஞ்சலை அனுப்பி அதில் DTD இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி, இரண்டாவது கடனீட்டுப் பத்திரங்களுக்கான (செகண்ட் டிராஞ்சி) ரூ. 8 கோடி தொகையை செலுத்துமாறு கோரியிருந்தது.

பெருநிறுவன கடன்தாரர் இரண்டாவது கடனீட்டுப் பத்திரங்களுக்கான (செகண்ட் டிராஞ்சி) ரூ. 8 கோடி தொகையை செலுத்தக் கோரி 1 லிருந்து 3 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு ஒரு அறிவிப்பையும் வழங்கியிருக்கிறார்.

8. 2019 செப்டம்பர் 12 ஆம் தேதி, பெருநிறுவன கடன்தாரர் நிவாரணம் வேண்டி இதர எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஒரு நடுவர் தீர்பாய நடைமுறைகளை மேற்கொண்டார். பீக்கான் டிரஸ்டீஸ் ஷிப் வட்டித் தொகையான ரூ. 2,18,95,890.41 வழங்கப்படாதது குறித்து பெருநிறுவன கடன்தாரருக்கு ஒரு அறிவிப்பை வழங்கியது. மேலும் பத்திரங்கள் மீதான வட்டித் தொகை ரூ. .2,18,95,890.41/ செலுத்தத் தவறியதான் காரணமாக, அக்டோபர் 17 , 2019 இல் திருப்பிச் செலுத்தப்படவேண்டிய மொத்த முதலீட்டுத் தொகையையும் அதாவது ரூ.77,94,92,513/– விரைந்து செலுத்துவதை செயல்படுத்துவதற்கான அறிவிப்பு ஒன்றையும் பீக்கான் டிரஸ்டீஸ் ஷிப் வழங்கியது.

9. 2019 அக்டோபர் 18 அன்று 1 லிருந்து 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் பங்கு அடமான ஒப்பந்த விதி உட்பிரிவு 6.1 ஐ செயல்படுத்தி ரூ. 91. 78 கோடி மதிப்புள்ள 26.60 இலட்சம் பங்குகளை எதிர்மனுதாரர்களின் பெயரிலுள்ள டிமேட் கணக்கு(களுக்கு) (DEMAT) மாற்றிக்கொண்டார்கள்.

10. 2019 அக்டோபர் 18–20 தேதிகளுக்கிடையில் பெருநிறுவன கடன்தாரர் பாம்பே உயர்நீதி மன்றத்தின் முன்பாக நடுவர் தீர்பாய நடைமுறைகளை தொடங்கியது. 1 லிருந்து 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் அந்த நடுவர் தீர்பாய நடைமுறைகளுக்கு அவர்களே ஒப்புக்கொண்டிருந்த நிலையிலும், IBC விதிப்பிரிவு 7 இன் கீழ் ஒரு மனுவை தேசிய நிறுமச் சட்ட தீர்ப்பாய மும்பை அமர்வின் (NCLT) முன் தாக்கல் செய்தார்கள்.

11. 2020 அக்டோபர் 15 அன்று பெருநிறுவன கடன்தாரர் அதன் உரிமை கோரல் அறிக்கையை சமர்ப்பித்து அதில் தனக்கு ஏற்பட்ட இழப்பு

மற்றும் பாதிப்புக்களுக்கான மொத்தத் தொகை ரூ.848,75,30,000/–ஐ வழங்கக்கோரியிருந்தார்கள்

12. 2020 , பிப்ரவரி 26 அன்று இதன் எதிர்மனுதார்கள் ஒரு பதில் மற்றும் எதிர் கோரிக்கை அறிக்கையை சமர்ப்பித்தார்கள் அதில் அவர்கள் கோரியிருந்த தொகையான ரூ. 73,56,59,238–ஐ வழங்குமாறு கேட்டிருந்தார்கள்

13. 2021 மார்ச் 24 அன்று, இசைவுத் தீர்ப்பாளர் , பீக்கான் டிரஸ்டீஸ் ஷிப் மற்றும் இதர எதிர் மனுதாரர்களுக்கு ஆதரவாக ஒரு இடைக்கால உத்திரவைப் பிறப்பித்தார் மற்றும் அதில் ரூ. 72,06,99,244 /– தொகையை வட்டியோடு செலுத்துமாறு பெருநிறுவன கடன்தாரருக்கு உத்தரவிட்டார்.

14. இசைவுத் தீர்ப்பாளரின் இந்த உத்திரவால் மனக்குறையுற்ற இதன் மேல்முறையீட்டாளர் பெருநிறுவன கடன்தாரர் 2021 ஏப்ரல் 21 , அன்று நடுவர் இசைவுத் தீர்வுச்சட்டம் 1996 பிரிவு 34 இன் கீழ் ஒரு சமரச தீர்வுக்கான மனுவை பாம்பே உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார், அது இன்னும் நிலுவையில் உள்ளது.

15. NCLT மும்பை அமர்வு இந்த வழக்கை விசாரித்து, 2021 மே 13 அன்று அதன் உத்திரவை நிறுத்தி வைத்தது. 2021 ஜூலை 1 அன்று , பெருநிறுவன கடன்தாரர் மற்றும் 1 லிருந்து 3 வரையிலான எதிர் மனுதாரர்கள் கூட்டாக ஒரு மனுவை NCLT மும்பை அமர்வு முன் தாக்கல் செய்து அதில், தரப்பினர்கள் தீர்வு காணும் ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டு, 2021 ஜூலை 10 ஆம் தேதி வரை கால அவகாசம் அளிக்குமாறும் கோரியுள்ளதால், இவ்வுத்தரவை தள்ளிவைக்கும்படி வேண்டுரைத்னர்.

16. 2021 ஜூலை 12 அன்று பெருநிறுவன கடன்தாரர் மற்றும் இதன் 1 லிருந்து 3 வரையிலான எதிர் மனுதாரர்கள் கூட்டாக மீண்டும் ஒரு மனுவை NCLT மும்பை அமர்வு முன் தாக்கல் செய்து அதில் தீர்வுகளை எட்டி

அடைய 2021 ஜூலை 23 ஆம் தேதிவரை கால அவகாசம் கேட்டிருந்தார்கள் அதன் பிறகு 2021 ஜூலை 26 அன்று அவர்கள் 2021 ஆகஸ்ட் 12 ஆம் தேதிவரை மீண்டும் ஒருமுறை கால அவகாசம் கேட்டிருந்தார்கள்.

17. 2021 ஆகஸ்ட் 3 அன்று NCLT மும்பை அமர்வு , தீர்வு காணுவதற்கான கால அவகாசத்தை மேலும் நீட்டிக்கும்படியான தரப்பினர்களின் வேண்டுதலை நிராகரித்ததுடன், IBC பிரிவு 7 இன் கீழ் பெருநிறுவன கடன்தாரருக்கு எதிராக 1 லிருந்து 3 வரையிலான எதிர் மனுதாரர்கள் சமர்ப்பித்த மனுவை ஏற்று அனுமதித்தது.

18. பெருநிறுவன கடன்தாரருக்கு எதிராக CIRP நடைமுறைகளை தொடர கோரிய மனுவை ஏற்று அனுமதித்து 2021 ஆகஸ்ட் 3 அன்று NCLT மும்பை அமர்வு அளித்த உத்திவால் மனக்குறையுற்ற பெருநிறுவன கடன்தாரரின் இயக்குனரான மேல்முறையீட்டாளர் , புது டில்லி NCLAT இல் நிறுவன மேல்முறையீட்டு மனு வை (மே.தீ) (நொடிப்பு நிலை) எண். 598/2022–ஐ தாக்கல் செய்தார்.

19. 2021 ஆகஸ்ட் 8 அன்று தரப்பினர்கள் தங்களது பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு கண்டு, ஒரு முறையான தீர்வு ஆவணத்தை நிறைவேற்றினார். அதன் நகல் பின்இணைப்பு A–25 ஆக இணைக்கப்பட்டிருக்கிறது.

20. 2021 ஆகஸ்ட் 10 அன்று தரப்பினர்களிடையே மேற்கொள்ளப்பட்ட தீர்வை கருத்தில் கொண்ட NCLAT, IBC பிரிவு 13 இன் கீழ் வெளியீட்டிற்கு இடைக்காலத் தடை விதித்தது, மேலும் IBC பிரிவு 12 A இன் கீழ் நடைமுறைகளைக் கடைப்பிடிக்கும் உரிமையை தரப்பினர்களுக்கு வழங்கியது.

21. 2021 ஆகஸ்ட் 12 அன்று தரப்பினர்கள் இருவரும் IRP இன் அனுமதியோடு, IBC சட்டப்பிரிவு 12 A இன் கீழ் ஒரு மனுவை, மும்பை NCLT

முன்பாக தாக்கல் செய்த, இருப்பினும் இதுநாள் வரை அது பட்டியலிடப்படவில்லை.

22. CoC உருவாக்குவதற்கு 2021 ஆகஸ்ட் 18 அன்று, NCLAT தடை விதித்தது ஆனால், அந்த தீர்வை கோப்பிற்கு எடுத்துக் கொண்டு அந்த வழக்கை தீர்வு காண NCLAT விதிகளின் விதி 11 இன் கீழான அதன் அதிகாரத்தை செயல்படுத்த மறுத்துவிட்டது. மேலும், IRP க்கு அதை வெளியிட NCLAT அனுமதியளித்ததுடன், தரப்பினர்களிடையே பிரச்சினைக்கான தீர்வு காணப்பட்டிருந்த நிலையிலும், அனைத்து சொத்துக்களையும் ஒப்படைத் CIRP நடைமுறைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியது. NCLAT இன் 2021 ஆகஸ்ட் 18 தேதியிட்ட உத்திரவால் மனக்குறையுற்ற இதன் மேல்முறையீட்டாளர் இந்த தற்போதைய உரிமையியல் மேல்முறையீட்டை தாக்கல் செய்திருக்கிறார்.

23. நிதி வழங்குனர் குழுவின் 90% வாக்களிக்கும் பங்குகளின் ஒப்புதலுடன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில், விண்ணப்பதாரர் செய்த விண்ணப்பத்தின் பேரில் IBC சட்டப் பிரிவு 7 அல்லது பிரிவு 9 அல்லது பிரிவு 10 இன் கீழ் அனுமதிக்கப்பட்ட மனுவை திரும்பப்பெற பிரிவு 12 A தீர்ப்பாயருக்கு அதிகாரமளிக்கிறது.

24. மனுதாரரால் தாக்கல் செய்த மனுவை ஏற்று, IBC சட்டப்பிரிவு 7 இன் கீழான ஒரு மனுவை திருப்பப்பெறுவதை IBC சட்டப்பிரிவு 12 A தெளிவாக அனுமதிக்கிறது. கமிட்டி ஆஃப் கிரடிட்டார் அமைப்புக்கு (பெருநிறுவன நிதி வழங்குனர் குழு) தேவையான சதவிகித்தில் வாக்குகள் அளிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்படுவது குறித்த கேள்வி அம்மாதிரியான கமிட்டி ஆஃப் கிரடிட்டார் அமைப்பு (பெருநிறுவன நிதி வழங்குனர் குழு) ஒன்று உருவாக்கப்பட்ட பிறகே எழும். கமிட்டி ஆஃப் கிரடிட்டார் அமைப்பை (பெருநிறுவன நிதி வழங்குனர் குழு) உருவாக்குவதற்கு முன்பு, IBC

சட்டப்பிரிவு 7 இன் கீழ் அனுமதிக்கப்பட்ட மனுவை மனுதாரர் திரும்பப்பெறுவதில் எந்த தடையுமில்லை என்பதே எங்களது கருத்தாகும்.

25. நிறுமங்கள் சட்டம் 2013 பிரிவு 469 இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தை செயல்படுத்தி, மத்திய அரசு தேதிய நிறுமச் சட்ட தீர்ப்பாய விதிகள் 2016 ஐ இதன் பிறகு " NCLT விதிகள்" வகுத்துள்ளது என்று குறிப்பிடலாம் . NCLT விதிகளின் விதி 11 பின்வருமாறு குறிப்பிடுகிறது. :

> " 11. ***இயல்பான உள்ளார்ந்த அதிகாரங்கள்*** *: நீதியை நிலை நாட்டும் தேவை எழும் போது அல்லது தீர்ப்பாயத்தின் நடைமுறைகளை தவறாகப் பயன்படுத்துவதை தடுக்க, அம்மாதிரியான உத்திரவுகளைப் பிறப்பிப்பதற்கு தீர்ப்பாயத்துக்கு உள்ள இயல்பான உள்ளார்ந்த அதிகாரத்தை இந்த விதிகளில் உள்ள எதுவும், வரையறுக்கவோ அல்லது வேறு வகையில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவோ கருதமுடியா "*

26. அதன் அறிக்கையில் நோக்கங்கள் மற்றும் காரணங்கள் குறித்து குறிப்பிடுகையில், கார்போரேட் நபர்கள், கூட்டு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் ஆகியோரின் மறுசீரமைப்பு, நொடிப்பு நிலை தீர்வுகள் தொடர்பாக, அந்நபர்களின் சொத்து மதிப்பை அதிகரிப்பதற்காகவும், தொழில் முனைவோரை ஊக்குவிக்கவும், அரசுக்கு செலுத்தவேண்டிய நிலுவைத்தொகைகளின் முன்னுரிமை வரிசையில் மாற்றங்களை மேற்கொள்வது உட்பட, வரவு வட்டி இருப்பு அனைத்து பங்குதாரர்களுக்கும் கிடைப்பதை உறுதி செய்யவும் , மற்றும் அதில் அது சம்பந்தமான விஷயங்களுக்கு நொடிப்புநிலை மற்றும் வணிக நொடிப்பு நிலை [இன்சால்வன்சி அண்ட் பேங்க்ரப்ட்ஸி] வாரியத்தை நிறுவவும், ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் சட்டங்களை தொகுத்தமைத்து அவற்றில் திருத்தங்களை மேற்கொள்வதுதான் IBC இன் குறிக்கோளாக இருக்கிறது.

27. நொடிப்பு மற்றும் பொருளறு நிலை [இன்சால்வன்சி அண்ட் பேங்க்ரப்ட்ஸி] க்கு விரைவாக தீர்வுகாண பயன்தரத்தக்க ஒரு சட்டபூர்வமான கட்டமைப்பு இருப்பது தொழில்முனைவோரை ஊக்குவித்து, தொழிலை மேம்படச்செய்யும், மேலும் அதிகளவில் முதலீடுகளை ஈர்க்க வழிவகை செய்து அதிகளவில் பொருளாதார வளர்ச்சியையும் மற்றும் மேம்பாட்டையும் உறுதி செய்யும் என்று இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

28. NCLT விதிகளின் கீழான சட்டமுறை விதி 11 இன் படியான குறிக்கோள்கள் மற்றும் காரணங்கள் குறித்த அறிக்கையை வாசித்தில், அது CIRP–இன் மனுதாரருக்கு மனுவைத் திருப்பப் பெற்றுக்கொள்ள அனுமதி அளிப்பது உட்பட நீதியை நிலைநாட்டும்படியான உத்தரவை பிறப்பிக்க NCLT க்கு உதவுகிறது மற்றும் ஒரு பெருநிறுவன அமைப்புக்கு எந்த தடையுமின்றி தொழிலை எளிதாக நடத்தவும், உதவுகிறது.

29. பெருநிறுவன கடன்தாரரின் முதலீடுகள் தங்களின் வாழ்வியல் மற்றும் வாழ்வாதாரத்திற்காக பெருநிறுவன கடன்தாரர் மீது சார்ந்திருக்கும் மக்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கையில், CIRP மனுதாரரின் பிரச்சினையை தீர்வு காணப்பட்டபிறகு அந்த மனுவைத் திருப்பப் பெற்றுக் கொள்ளும்படியான அனுமதியை மறுப்பதற்கான காரணம் எதுவுமில்லை

30. பெருநிறுவன கடன்தாரருக்கு எதிராக மூன்றாம் தரப்பினர் உரிமை கோரிக்கைகளை எழுப்பக்கூடும் என்ற யூகத்தின் அடிப்படையில் , (CoC) பெருநிறுவன நிதி வழங்குனர் குழுவை உருவாக்கும் முன்பாக தீர்வுகளை முடக்க முடியாது. CIRP க்கான மனுவை மனுதாரர் திருப்பப் பெற்றுக்கொள்வது என்பது IBC இன் கீழ் வழக்கு நடவடிக்கையை மீண்டும் தொடர எந்த ஒரு நிதி வழங்குனரையும் தடை செய்யாது. தீர்வு காண் நடைமுறைகளை நிறைவேற்றுவதற்கான கால வரையறைகளுக்கு இணங்க நடப்பது என்பது தீர்வுகளை முடக்குவதற்கான காரணமல்ல.

31. மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான மூத்த வழக்குரைஞர் திரு முகுல் ரோஹ்தகி அவர்கள், எஸ் அப்துல் நசீர் மற்றும் கிருஷ்ணா முராரி JJ ஆகியோர் அடங்கிய ஒரு வலுவான ஒருங்கிணைந்த அமர்வு, உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கு எண். 4993 /2021 இல் வழங்கிய 25 ஆகஸ்ட் 2021 தேதியிட்ட உத்திரவை நமது கவனத்துக்கு கொண்டுவந்தார் அதில் தொடர்புடைய பகுதி பின்வருமாறு :

"(3) தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் கூற்றுக்களை நாங்கள் கேட்டோம். CoC இதுவரை உருவாக்கப்படவில்லை என்பது பிரச்சினையல்ல, ஸ்விஸ் ரிப்பன்ஸ் பிரைவேட் லிமிட்டட் மற்றும் மற்றொரு நபர் //எதிர்// இந்திய யூனியன் மற்றும் பலர் –(2019) 4 SCC 17 என்ற வழக்கில், நிதி வழங்குனர்கள் குழு (CoC) அமைக்கப்படுவதற்கு முன்பு எந்த ஒரு நிலையிலும், ஒரு தரப்பினர் தேசீய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தை (NCLT) நேரடியாக அணுகலாம் என்றும், அந்த தீர்ப்பாயம், NCLT விதிகளின் விதி 11 இன் கீழ் தனது உள்ளுறை அதிகாரங்களை செலுத்தி, திரும்பப்பெறுவதற்கான அல்லது தீர்வுக்கான்வதற்கான மனுவை அனுமதிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது :

82. 7 முதல் 9 வரையிலான சட்டப்பிரிவுகளின் கீழ் ஒரு கடணாளரின் மனுவை அனுமதிப்பதன்மூலம் சட்டம் செயல்பாட்டுக்கு வந்துவிட்டால், தீர்ப்புப் பகரும் அதிகார அமைப்பு முன்பான வழக்கு நடவடிக்கை ஒரு கூட்டு நடவடிக்கை என்பதால், அந்த நடவடிக்கை அவ்வழக்கு தொடர்பான நடவடிக்கையாகும் என்பது தெளிவு, அது வழக்கு தொடர்பான நடவடிக்கையாக இருப்பதால், தீர்வு முறையை மேற்பார்வையிடும் குழு ஒரு தனிப்பட்ட பெருநிறுவன கடன்தாரரும் அதன் உரிமைக் கோரலை பூர்த்தி செய்து தீர்வு காண்பதற்கு முன்பு, தீர்வுக்கான நடைமுறைகளை கண்காணிக்கும் அமைப்போடு கலந்தாலோசிக்கவேண்டியது அவசியமாகிறது. ஒரு நிதி வழங்குனார்கள்

குழு அமைக்கப்படுவதற்கு முன்பு (குறிப்பிடப்பட்ட காலவரையறைகளின்படி, இடைக்கால தீர்வுக்கான் வல்லுநர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் எந்த சமயத்திலும், நிதி வழங்குனர்களின் குழு அமைக்கப்படலாம்) என்ன நடக்கும் என்பதை குறித்த கேள்வி எழுகிறது. நிதி வழங்குனர்களின் குழு அமைக்கப்படாத எந்த ஒரு நேர்விலும், தரப்பினர் NCLT ஐ நேரடியாக அணுகலாம், மேலும், தீர்ப்பாணையம் NCLT விதிகள் 2016 இன் விதி 11 இன் கீழ் அதற்குள்ள உள்ளுறை அதிகாரத்தை செயலுத்தி, திரும்பப் பெறுவதற்கான அல்லது தீர்வு காண்பதற்கான மனுவை, அனுமதிக்கலாம் அல்லது மறுக்கலாம் என்பதை நாங்கள் தெளிவுப்படுத்துகிறோம். இது அனைத்து சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் ஒவ்வொரு வழக்கின் பொருண்மைகளிலும் உள்ள தொடர்புடைய அனைத்து அம்சங்களையும் பரிசீலித்தப் பின்னர் தீர்மானிக்கப்படவேண்டும்.

(வலியுறுத்திக் கூறப்பட்ட)

(4) தற்போதைய வழக்கில், ஏற்கனவே கண்டறிந்தவாறு, பெருநிறுவன கடன்தாரருக்கும், மனுதாரர்–1–ஆம் எதிர்மனுதாருக்குமிடையேயான பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட்டது என்ற காரணத்தின் அடிப்படையில், இன்ஸால்வன்சி மற்றும் பேங்க்ரப்டசி கோட் 2016 (IBC) பிரிவு 9 இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட நிறுவன மனுவை , திரும்பப்பெறுவதற்காக NCLT விதிகளில் விதி 11 இன் கீழ் , NCLT மும்பை அமர்வின் முன்பு மனுதாரர் – 1 ஆம் எதிர்மனுதாரர் மனு தாக்கல் செத்துள்ளார் ,

(5) தரப்பினார்களுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞரின் வாதங்களைக் கேட்டபிறகு, வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்ட பிறகும், தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது

என்ற காரணத்தின்பேரிலும், மனுதாரர்–1–ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் மனுவை திரும்பப்பெறுவதற்காக, NCLT விதிகளில் விதி 11 இன் கீழ் மனுத் தாக்கல் செய்தது நியாயமானது என்று நாங்கள் கருதுகிறோம்."

32. IBC பிரிவு 12 A இன் கீழ் தீர்வுக்கான தாக்கல் செய்யப்பட்ட மனு தீர்ப்புப் பகரும் அதிகார அமைப்பு (NCLT) முன்பு நிலுவையில் உள்ளது. நிதி வழங்குனர்களின் குழுவை நிறுவுவதற்கு, NCLAT தடைவிதித்துள்ளது. எதிர்ப்புக்குள்ளான உத்தரவு ஒரு இடைக்கால உத்தரவு என்பதால், அதில் தலையீடு கோரமுடியாது. IBC சட்டப்பிரிவு 62 இன் கீழான மேல்முறையீட்டில், இந்த நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படவேண்டிய எந்த ஒரு சட்டப் பிரச்சினையும் இல்லை. அதன் படி இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது. மேற்குறிப்பிட்ட கருத்துரைகளின் அடிப்படையில், தீர்வுக்கான மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அதை தீர்மானிக்கும்படி NCLT க்கு உத்தரவிடப்படுகிறது.

மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."